


தமிழகம் முழுவதும் முதலமைச்சர் கோப்பை விளையாட்டு போட்டியில் 53 வகையான விளையாட்டுப் போட்டிகள் மாவட்ட அளவில் நடைபெற்று முடிந்த நிலையில், இதில் வெற்றி பெற்ற அணிகளுக்கு செங்கல்பட்டு மாவட்டத்தில் பேட்மிட்டன், சிலம்பம், டேபிள் டென்னிஸ், மாற்றுத் திறனாளிகளுக்கான விளையாட்டு போட்டிகள் என 5 ஆயிரம் விளையாட்டு வீரர்கள் கலந்துகொள்ளும் மாநில அளவிலான விளையாட்டுப் போட்டிகளை குறு. சிறு மற்றும் நடுத்தர தொழில் நிறுவனங்கள் துறை அமைச்சர் தா.மோ. அன்பரசன் தொடங்கி வைத்தார். அருகில் நாடாளுமன்ற உறுப்பினர் க.செல்வம், ஒன்றியக் குழுத் தலைவர் எல்.இதயவர்மன், திருப்போரூர் தெற்கு ஒன்றிய செயலாளர் பையனூர் எம்.சேகர் மற்றும் கழக நிர்வாகிகள் உள்ளனர்.



தொழிலாளர் நலன் மற்றும் திறன் மேம்பாட்டுத் துறை அமைச்சர் சி.வெ.கணேசன் கடலூர் மாவட்டம், திட்டக்குடி சட்டமன்றத் தொகுதி, மங்களூர் கிழக்கு ஒன்றியம், ஆவட்டி, குடிக்காடு, மேல் ஆதனூர், கீழ் ஆதனூர், ஆகிய கிராமங்களில் மக்களை சந்தித்து குறைகள் கேட்டறிந்து நலத்திட்ட உதவி வழங்கினார்.

### திருவள்ளூரில் இந்து சமய அறநிலையத் துறையின்

# புதிய திருவள்ளூர் மண்டல இணை ஆணையர் தற்காலிக அலுவலகம்!

## அமைச்சர் ஆவடி சா.மு.நாசர் திறந்து வைத்தார்!

திருவள்ளூர் அக் 04;

திருவள்ளூர் மாவட்டம் மற்றும் நகராட்சி பகுதிக்கு உட்பட்ட ஜே.என்.சாலைச் தானம் அவன்யூவில் இந்து சமய அறநிலையத் துறையின் புதிய திருவள்ளூர் மண்டல இணை ஆணையர் தற்காலிக அலுவலகத்தை மாண்புமிகு சிறுபான்மையினர் நலன் மற்றும் வெளிநாடு வாழ் தமிழர் நலத்துறை அமைச்சர் ஆவடி சா.மு.நாசர் திறந்து வைத்தார் பார்வையிட்டார்.

இந்து சமய அறநிலையத் துறை வேலூர் மண்டல இணை ஆணையர் நிர்வாகத்தின் கீழ் ஏற்கனவே வேலூர், இராணிபேட்டை, திருப்பத்தூர், மற்றும் திருவள்ளூர், ஆகிய மாவட்டங்களில் அமைந்துள்ள திருக்கோயில்களின் நிர்வாக மேலாண்மை கவனித்து வரப்பட்டது. அதன்படி திருவள்ளூர் மாவட்டத்தில் 202 பட்டியலைச் சார்ந்த திருக்கோயில்கலும் மற்றும் 824 பட்டியலைச் சாராத திருக்கோயில்கள் என மொத்தம் 1026 திருக்கோயில்கள் என இந்து சமய அறநிலையத் துறை கட்டுப்பாட்டில் இருந்து வருகிறது. திருவள்ளூர் மாவட்டத்தின் கும்மிடிப்பூண்டி, பொன்னேரி, மீஞ்சூர் மற்றும் ஊத்துக்கோட்டை போன்ற பகுதிகளில் இருந்து திருக்கோயில் நிர்வாகம் தொடர்பாக செயல் அலுவலர்கள்,ஆய்வர்கள் மற்றும் பொதுமக்கள் தங்கள் குறைதீர்வு மனுக்களை அளிப்பதற்கும் சுமார் 200 கி.மீக்கு மேல் பயணம் செய்து வேலூர் இணை ஆணையர் அலுவலகத்திற்கு சென்று வந்தனர்.

மேலும் மாவட்டத்தில் பெரும்பாலான திருக்கோயில்கள் சென்னை மாநகருக்கு அருகில் அமைந்துள்ளதால், அவற்றிற்கு சொந்தமாக பல கோடி மதிப்புள்ள அசையா சொத்துகள் உள்ளது, அச்சொத்துகளை மேலாண்மை செய்வதற்கும், நீதிமன்றங்களில் நிலுவையாக உள்ள வழக்குகளை கண்காணித்து, அவற்றில் திருக்கோயில்களுக்கு சாதகமாக தீர்ப்பு பெறுவதற்கு நடவடிக்கை எடுப்பதற்கும், திருக்கோயில்களின் அசையா சொத்துகளைக் வருவாய் ஈட்டிட ஏதுவாக, திருவள்ளூர் கண்காணித்து, முறையாக மாவட்டத்திற்கென தனியே ஓர் இணை ஆணையர் அலுவலகம் ஏற்படுத்துவது அவசியம் என கருதி இந்து சமய அறநிலையத்துறை அமைச்சர் அவர்களின் வழி காட்டுதலின் படி இந்து சமய அறநிலையத்துறை ஆணையர் அவர்களால் அரசிற்கு பரிந்துரை செய்யப்பட்டதைத் தொடர்ந்து தமிழ்நாடு முதலமைச்சர் திரு.மு.க.ஸ்டாலின் அவர்களின் சீரிய நல்லாட்சியின் கனிவுடன் பரிசீலிக்கப்பட்டு அரசாணை(நிலை1) எண்.364,சுற்றுலா, பண்பாடு மற்றும் அறநிலையங்கள் (அ.நி 21) துறை நாள். 26.08.2025 ன் படி புதிதாக திருவள்ளூர் இணை ஆணையர் மண்டலம் தோற்றுவித்து உத்தரவிடப்பட்டது.

இவ்வுத்தரவின் அடிப்படையில் எண்.7. சந்தானம் அவன்யூ, ஜே.என்.சாலை, திருவள்ளூர் நகர், என்ற முகவரியில் அமைந்துள்ள கட்டடத்தில் சிறுபான்மையினர் நலன் மற்றும் வெளிநாடு வாழ் தமிழர் நலத்துறை அமைச்சர் அவர்களால் புதிய இணை ஆணையர் அலுவலகம் தொடங்கி வைக்கப்பட்டது.

இந்நிகழ்ச்சியில் மாவட்ட ஆட்சித் தலைவர் மு.பிரதாப், மாவட்ட கழக செயலாளர் திருத்தணி எஸ்.சந்திரன் எம்.எல்.ஏ சட்டமன்ற உறுப்பினர் வி.ஜி.ராஜேந்திரன் ஆ.கிருஷ்ணசாமி டி.ஜே. கோவிந்தராஜன், துரை சந்திரசேகர், நகர் மன்ற தலைவர் உதயமலர் பாண்டியன், நகர துணை தலைவர் சி.சு.ரவிச்சந்திரன், தலைமை செயற்குழு உறுப்பினர் கே.ஜெ.ரமேஷ், இணை ஆணையர்கள் அனிதா, ரமணி, அருணாசலம், அருள்மிகு சுப்ரமணிய சுவாமி திருக்கோயில் உதவி ஆணையர், சிவஞானம், திருக்கோயில்களின் செயல் அலுவலர்கள் மாதவன், து. ரு.பிரகாஷ், லதா, சரவணன், பாலாஜி, ராகவன், முத்துதமிழ், சங்கரன், ஒன்றிய செயலாளர்கள் அரிகிருஷ்ணன், மோ.ரமேஷ், எஸ்.மகாலிங்கம் வார்டு கவுன்சிலர் அருணாஜெய் கிருஷ்ணன், துறை சார்ந்த அலுவலர்கள் பணியாளர்கள் கலந்து கொண்டனர்.

### ஆ.இராசா எம்.பி.சிறப்புரை! திருவள்ளூர் மேற்கு மாவட்ட தி.மு.க.

# பாக ஒருங்கிணைப்பாளர்கள் கலந்துரையாடல் கூட்டம்!

## மாவட்ட செயலாளர் திருத்தணி எஸ்.சந்திரன் எம்.எல்.ஏ. அறிவிப்பு!



திருவள்ளூர் அக் 04;-

தலைமை கழக அறிவுறுத்தலுக்கு ஏற்ப பாக ஒருங்கிணைப்பாளர்கள் நியமிக்கப்பட்டு அவர்களுக்கான வாக்குச்சாவடிகள் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளன. ஒன்றிய, நகர, பேரூர் கழக செயலாளர்களோடு நியமிக்கப்பட்டுள்ள பாக ஒருங்கிணைப்பாளர்கள் (Booth Co-ordinators) இணைந்து தேர்தல் பணிகளை ஆற்றிட ஏதுவாக எடுக்கப்பட வேண்டிய முன்னெடுப்புகள் குறித்து கலந்துரையாடல் கூட்டம் 05-10-2025 ஞாயிற்றுக்கிழமை அன்று காலை 9.00 மணியளவில் ஒட்டல் பெரம்பூர் ஸ்ரீனிவாசா கூட்ட அரங்கில் சென்னை சில்க்ஸ் அருகில் மாவட்ட கழக செயலாளர் திருத்தணி எஸ்.சந்திரன் எனது தலைமையில் மண்டல பொறுப்பாளர் கழக துணைப் பொதுச்செயலாளர் மாண்புமிகு ஆ.இராசா எம்.பி. சிறப்புரையாற்றுகிறார்.

இக்கூட்டத்தில் கழக கொள்கை பரப்புச் செயலாளரும் அரக்கோணம் நாடாளுமன்ற உறுப்பினருமான டாக்டர்.எஸ்.ஜெகத்ரட்சகன். தலைமை செயற்குழு உறுப்பினரும், திருவள்ளூர் சட்டமன்ற உறுப்பினருமான வி.ஜி.ராஜேந்திரன்.,தலைமை செயற்குழு உறுப்பினர் திருத்தணி எம். பூபதி மாவட்ட அவைத் தலைவர் கே.திராவிட பக்தன், கழக விவசாய அணி துணைச் செயலாளர் ஆர். டி.இ.ஆதிசேஷன் கழக நெசவாளர் அணி துணைத் தலைவர் ஒ.ஏ.நாகலிங்கம் திருத்தணி தொகுதி பார்வையாளர் சண்முகநாதன், திருவள்ளூர் தொகுதி பார்வையாளர் மாஸ்டர் பெ. சேகர், மாநில தொண்டர் அணி பயிற்சியாளர் மாஸ்டர்.இ. குருதாஸ், மாவட்ட கழக நிர்வாகிகள் டாக்டர். வி.சி.ஆர்.குமரன், சி.ஜெயபாரதி, பா.உதயமலர் பாண்டியன், எம்.மிதுன் சக்கரவர்த்தி, பொதுக்குழு உறுப்பினர்கள் ப. சிட்டிபாபு, எஸ்.கே.ஆதாம், வி. கிஷோர், மு.சுப்பிரமணியம், பி.இராஜேஸ்வரி இரவீந்திரநாத், கலந்துக் கொள்கின்றனர், மற்றும் திருவள்ளூர் மேற்கு மாவட்டத்திற்குட்பட்ட ஒன்றிய நகர பேரூர் கழகச் செயலாளர்கள், கழக மாவட்ட அணிகளின் அமைப்பாளர்கள், துணை அமைப்பாளர்கள், பாக ஒருங்கிணைப்பாளர்கள் (Booth Co-ordinators) அனைவரும் தவறாமல் கலந்துகொள்ளுமாறு அன்புடன் கேட்டுக் கொள்கிறேன் என மாவட்ட கழக செயலாளர் திருத்தணி எஸ். சந்திரன் எம்.எல்.ஏ விடுத்துள்ள அறிக்கையில் தெரிவித்துக் கொண்டார்.

### ஆ.இராசா எம்.பி– அமைச்சர் ஆவடி சா.மு.நாசர் சிறப்புரை!

# திருவள்ளூர் கிழக்கு மாவட்ட தி.மு.க. பாக ஒருங்கிணைப்பாளர் கூட்டம்!

## மாவட்ட கழக பொறுப்பாளர் வல்லூர் எம்.எஸ்.கே.ரமேஷ் ராஜ் அறிவிப்பு!



திருவள்ளூர் அக் 04;-

தலைமைக் கழக அறிவிப்புக்கிணங்க பாக ஒருங்கிணைப்பாளர்கள் நியமிக்கப்பட்டு அவர்களுக்கான வாக்குச்சாவடிகள் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளன. ஒன்றிய, நகர, பேரூர் கழக செயலாளர்களோடு நியமிக்கப்பட்டுள்ள பாக ஒருங்கிணைப்பாளர்கள் (Booth Co-ordinators) இணைந்து தேர்தல் பணிகளை முன்னெடுப்புகள் குறித்து கலந்துரையாடல் கூட்டம் 05.10.2025. நாளை காலை 11.00 மணியளவில் கவரைப்பேட்டையில் அமைந்துள்ள SVK திருமண மண்டபத்தில் நடைபெறுகிறது மாவட்ட கழக பொறுப்பாளர் வல்லூர் எம்எஸ்கே ரமேஷ் ராஜ் தலைமையில் நடைபெறுகிறது.

இதில் மண்டல பொறுப்பாளர், ஆ.ராசா.எம்.பி. அமைச்சர் ஆவடி.சா.மு. நாசர் ஆகியோர் சிறப்புரையாற்றுகிறார்கள் தலைமை செயற்குழு உறுப்பினர்கள்: டி.ஜெ.கோவிந்தராஜன் எம்.எல்.ஏ, இ.ஏ.பி. சிவாஜி, பி.ஜெ.மூர்த்தி, மாவட்ட அவைத்தலைவர் மு.பகலவன்,

மாவட்ட நிர்வாகிகள்: கே.வி.ஜி.உமாமகேஸ்வரி, மு.கதிரவன், எம்.எல்.இரவி, எஸ்.ரமேஷ், தொகுதி பார்வையாளர்: சுரேஷ்செல்வராஜ், கவிகணேசன், மாநில நிர்வாகிகள்: சி.எச்.சேகர், கே.ஜி.பாஸ்கர் சுந்தரம், வெ.அன்புவாணன், ஜி.ஸ்டாலின், ஏ.கே. சுரேஷ், எம்.ஜி.ராபட்ராஜ் துரை,

பொதுக்குழு உறுப்பினர்கள்: கே.சுப்பிரமணி, பா. செ.குணசேகரன், பி.வெங்கடாசலபதி, டாக்டர்.பரிமளம் விஸ்வநாதன், ஏ.வி. ராமமூர்த்தி ஒன்றிய நகர, பேரூர் கழக செயலாளர்கள்: டி.கே.சந்திரசேகர், கி.வே.ஆனந்தகுமார், மு. மணிபாலன், ந.பரிமளம், நா.செல்வசேகரன், ஆ.சத்தியவேலு, மு.முரளிதரன், ஜான்(எ)பொன்னுசாமி, ஆ.ராஜா, ஏ.ஆர்.டி.உதயசூரியன், வே.ஆனந்தகுமார், கா.சு.ஜெகதீசன், ஜி.இரவிக்குமார், அபிராமி குமரவேல், இரா.அறிவழகன், கா.சு.தமிழ்உதயன், பி. முத்து மற்றும் மாவட்ட அணிகளின் அமைப்பாளர்கள், மாவட்ட அணிகளின் நிர்வாகிகள், உள்ளாட்சி மன்ற பிரதிநிதி பாக ஒருங்கிணைப்பாளர்கள் (Booth Co-ordinators) அனைவரும் தவறாமல் கலந்துகொள்ளுமாறு அன்புடன் கேட்டுக் கொள்கிறேன என மாவட்ட கழக பொறுப்பாளர் வல்லூர் எம்.எஸ்.கே.ரமேஷ் ராஜ் விடுத்துள்ள அறிக்கையில் தெரிவித்துக் கொண்டார்.

# தாம்பரத்தில் மாநில அளவிலான கைபந்து விளையாட்டுப் போட்டி!

## வெற்றி பெற்ற அணிகளுக்கு எஸ்.ஆர்.ராஜா எம்.எல்.ஏ. பரிசு வழங்கினார்!

தாம்பரம், அக். 4-

தாம்பரத்தில் தொடர்ந்து இரண்டு நாட்களாக நடைபெற்ற மாநில அளவிலான கைபந்து விளையாட்டு போட்டிகள் நடைபெற்றன இதில் முதல் பரிசு வென்ற குழுவிற்கு மாநகர கழக செயலாளர் எஸ்.ஆர். ராஜா எம்.எல்.ஏ. ஒரு லட்சம் ரூபாயை பரிசாக வழங்கினார்.

தாம்பரம் மாநகர விளையாட்டு மேம்பாட்டு அணி சார்பில் மாநகர அமைப்பாளர் எஸ்.ஜி.கருணாகர பாண்டியன் அவர்களின் தலைமையிலும் ஏற்பாட்டிலும் நடைபெற்ற நிகழ்ச்சியில், மாநகர இளைஞரணி துணை அமைப்பாளர் ச.இராஜேஷ் வரவேற்புரையில், மாநகர விளையாட்டு மேம்பாட்டு அணி துணை அமைப்பாளர்கள் இரா.தாமோதரன், க. நாகேந்திரகுமார், ஆர்.ரஞ்சித்குமார், பி.கார்த்திக்ராஜா, வை.அருண்குமார், தினேஷ் கந்தசாமி ஆகியோர் முன்னிலையில்

இரண்டு நாட்கள் நடைபெற்ற மாநில அளவிலான கைபந்து போட்டியில் வென்ற அணிகளுக்கு

தாம்பரம் மாநகர செயலாளர், எஸ்.ஆர்.ராஜா.எம். எல்.ஏ, அவர்கள் முதல் பரிசு ருபாய் ஒரு லட்சம் ரொக்க பரிசும் மற்றவர்களுக்கு பதக்கங்களும் மற்றும் கோப்பைகளையும் வழங்கினார். இந்நிகழ்வில் மாவட்ட விளையாட்டு அலுவலர் ஆனந்த், 4, வது மண்டல குழு தலைவர், பெருங்களத்தூர் வடக்கு பகுதி செயலாளர் டி.காமராஜ், 5, வது மண்டல குழு தலைவர், தாம்பரம் மேற்கு பகுதி செயலாளர்.எஸ்.இந்திரன், பகுதி கழக துணை செயலாளர் கி.வேல்மணி, மாமன்ற உறுப்பினர்கள் மாநகராட்சி கொறடா.டி.ஆர். கோபி, ரமணிஆதிமூலம், பி. ஜோதிகுமார், லிங்கேஸ்வரி பாபு, சி.சுரேஷ், எல்.பெரியநாயகம் பகுதி துணை செயலாளர்.ஜா.ரவிகுமார், ஆர். செல்வகுமார், மாநகர வர்த்தக அணி துணை அமைப்பாளர் இரா.செல்வகுமார், ரீதர் பாபு, சீ.செழியன், வி. முனுசாமி, ஆர்.சஞ்சிவி, எஸ். சினிவாசகுமார், இரா.ரத்தினகுமார், இரா.விஜயகுமார், சிட்லபாக்கம்.மு.மனோகர். டி.கே.தாமஸ், ஆர்.ஆகஸ்டின், வீ.கார்த்திக், லோகேஷ், குட்டி, கலைவாணன், மங்களபுரம் எம்.பாபு, வீக்கி என்கிற யுவராஜ், சித்திரம்.வாசு, வை.தங்கராஜ், ஹாரிஸ், எம். ரமேஷ், டி.பட்டுராஜன், சிராஜீதின், ராரேந்திரன், விஜய், ஹரிஷ்குமார் மற்றும் மாவட்டமாநகரபகுதி அணிகளின் நிர்வாகிகள், பகுதி கழக நிர்வாகிகள், வட்ட செயலாளர்கள், வட்ட நிர்வாகிகள், கழக தோழர்கள் பொதுமக்களும் பெரும் திரளாக கலந்து கொண்டனர்.



திருவள்ளூர் கிழக்கு மாவட்டம் கும்மிடிப்பூண்டி தொகுதி ஊத்துக்கோட்டை பேரூர் திமுக சார்பில் வார்டு செயலாளர்கள் மற்றும் நிர்வாகிகள் ஆய்வுக்கூட்டம் பேரூர் செயலாளர் அபிராமி குமரவேல் ஏற்பாட்டில் நடைபெற்றது இதில் த மாவட்ட செயலாளர் வல்லூர் எம்.எஸ்.கே. ரமேஷ்ராஜ் , கும்மிடிபூண்டி தொகுதி பொறுப்பாளர் கவி கணேசன் ஆகியோர் வரும் 2026 ம் ஆண்டு நடைபெறும் சட்ட மன்ற தேர்தலில் சிறப்பாக பணியாற்ற வேண்டும் என பேசினர்கள் இதில் நிர்வாகிகள் பி.ஜெ.மூர்த்தி, மு.பகலவன், சி. எச்.சேகர், கே.வி. உமாமகேஸ்வரி, வெ.அன்புவாணன், ஜி.ஸ்டாலின், பா.செ.குணசேகரன், வெங்கடாசலபதி, குமரவேல், வெங்கடேசன், பார்த்திபன், திரிபுரசுந்தரி, ஜெயராமன், பா.து.தமிழரசன், ஜான்.பொன்னுசாமி, ஓட்டுனர் அணி ராஜேஷ், பிரபாவதி, சீனிவாசன் ,தமிழ்செல்வம், நரேஷ், மனோகரன், சரவணன், கவுஷ்பாஷா, ராஜேந்திரன், ஜெய்கணேஷ் மாலா, கிரேசி, சலபதி கேசவன், உள்பட பலர் உள்ளனர்.



தாம்பரத்தில் தொடர்ந்து இரண்டு நாட்களாக நடைபெற்ற மாநில அளவிலான கைபந்து விளையாட்டுப் போட்டிகள் நடைபெற்றது. இதில் முதல் பரிசு வென்ற குழுவிற்கு மாநகர கழக செயலாளர் எஸ்.ஆர். ராஜா எம்.எல்.ஏ ஒரு லட்சம் ரூபாயை பரிசாக வழங்கினார். இதில் கழக நிர்வாகிகள் கலந்து கொண்டனர்.

### தி.மு.க. இலக்கிய அணி

# மாவட்ட அமைப்பாளர் - துணை அமைப்பாளர்கள் நியமனம்!

## தி.மு.க.இலக்கிய அணிச் செயலாளர் வி.பி.கலைராஜன் அறிவிப்பு

கழகத் தலைவர் அவர்களின் ஆணைப்படி - மாவட்டப் பொறுப்பாளர் ஒப்புதலோடு தி.மு.க. இலக்கிய அணியின் **விழுப்புரம் தெற்கு** மாவட்ட அமைப்பாளர் - துணை அமைப்பாளர்கள் பின்வருமாறு நியமிக்கப்படுகிறார்கள்.

**விழுப்புரம் தெற்கு மாவட்டம்**

தலைவர் – ஆ. குணசேகரன் 257, காமராசர் சாலை, (ஜோதி மில் எதிரில்) அரகண்டநல்லூர், கண்டாச்சிபுரம் வட்டம், விழுப்புரம் மாவட்டம்.

துணைத் தலைவர் – சிறுவானூர் பரசுராமன் 374, நடுத் தெரு, சிறுவானூர், திருவெண்ணெய்நல்லூர் வட்டம், விழுப்புரம் மாவட்டம்.

அமைப்பாளர் – வே. ராஜசேகர் 1/155, ரெட்டியார் தெரு, தொரவி அஞ்சல், விக்கிரவாண்டி வட்டம், விழுப்புரம் மாவட்டம்.

துணை அமைப்பாளர்கள் - 1) ஜெ. விஜய்பாபு 17, பெருமாள் கோவில் தெரு, திருவெண்ணெய்நல்லூர் வட்டம், விழுப்புரம் மாவட்டம். 2) பி. குமார கிருஷ்ணன் 124, வடக்குத் தெரு, கயத்தூர், விக்கிரவாண்டி வட்டம், விழுப்புரம் மாவட்டம். 3) செ. முருகவேல் குளத்தங்கரை தெரு, ஏசாலம், வி. பிரம்மதேசம் அஞ்சல், விக்கிரவாண்டி வட்டம், விழுப்புரம் மாவட்டம். 4) ப. ராமலிங்கம், திரௌபதி அம்மன் கோவில் தெரு, வி. சாலை, விக்கிரவாண்டி வட்டம், விழுப்புரம் மாவட்டம். 5) வெ. சுப்பிரமணியன் 4/37, மன்மதன் கோவில் தெரு, ஒட்டம்பட்டு மற்றும் அஞ்சல், விழுப்புரம் மாவட்டம்.

| | |
|---|---|
| **“அண்ணா அறிவாலயம்”** | **வி.பி.கலைராஜன்** |
| சென்னை - 18. | செயலாளர், |
| நாள் : 03-10-2025. | தி.மு.க. இலக்கிய அணி |



காஞ்சிபுரம் வடக்கு மாவட்டம், முன்னாள் மாவட்டப் பிரதிநிதி டி.தசரதனின் சகோதரரும், தாம்பரம் மாநகராட்சி மேயர், மாநகர துணைச் செயலாளர் வசந்தகுமாரி கமலக்கண்ணன் சிரிய தந்தை, 32 வது வட்டப் பிரதிநிதி டி.துரைபாபு அவர்களின் 16 ஆம் நாள் நினைவஞ்சலி படத்திறப்பு நடைபெற்றது. இதில் தாம்பரம் மாநகர மேயர் வசந்தகுமாரி, மாநகர அவைத் தலைவர் கோ.காமராஜ், 4 வது மண்டல குழு தலைவர், பகுதிச் செயலாளர் டி.காமராஜ் எம்.சி, 5 வது மண்டல குழு தலைவர், பகுதிச் செயலாளர் எஸ். இந்திரன், பெருங்களத்தூர் தெற்கு பகுதிச் செயலாளர் எஸ்.சேகர், 32 வது வட்டச் செயலாளர் இ. கமலகண்ணன் மற்றும் கழக நிர்வாகிகள் பலர் பங்கேற்றனர்.



இராயபுரம் சட்டமன்ற தொகுதி 48வது வார்டு, பாண்டியன் திரையரங்கம் அருகில் சிறப்பாக நடைபெற்ற உங்களுடன் ஸ்டாலின் திட்ட முகாமில், இராயபுரம் சட்டமன்ற உறுப்பினர் ஐட்ரீம் இரா. மூர்த்தி கலந்துகொண்டு, அனைத்து துறைகளிலும் பொதுமக்களின் மனுக்கள் முறையாக பதிவு செய்யப்படுகிறதா என்பதை ஆய்வு செய்து, தீர்வு காணப்பட்ட மனுக்களை உடனடியாக பொதுமக்களுக்கு வழங்கினார். மேலும் மீதமுள்ள மனுக்கள் 45 நாட்களுக்குள் தீர்வு காண வேண்டும் என்று அரசு அதிகாரிகளிடம் தெரிவித்தார். இந்நிகழ்வில் இராயபுரம் மேற்கு பகுதி செயலாளர் வ.பெ. சுரேஷ், வட்டச் செயலாளர் ரவி, மாமன்ற உறுப்பினர் திருமதி. விஜய லெட்சுமி, விஜயகுமார் மற்றும் மாவட்ட, பகுதி, வட்ட, கழக நிர்வாகிகள் மற்றும் பொதுமக்கள் உடனிருந்தனர்.